**குற்றவியல் நடுவர் நீதிமன்றம் திருவொற்றியூர்,**

**முன்னிலை. கே. கார்த்திக்., எம்.எல்.,**

**நீதித்துறை நடுவர், திருவொற்றியூர்**

**2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 04 ஆம் நாள், வியாழக்கிழமை**

**PRC.No.10/2026**

**அரசிற்காக,**
**காவல் ஆய்வாளர்,**
**எம்.5 எண்ணூர் காவல் நிலையம்,**
**சென்னை - 600 057.**
(குற்றஎண்.154/2025) **...குற்றமுறையிடுபவர்**

//எதிர்//

எதிரி. தமீம் கான், ஆ/வ. 23,
த/பெ. அயூப் கான்,
எண். 1/87, மாவிடந்தல், பெரிய தெரு,
விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம். ... **எதிரி**

•••••

இவ்வழக்கு என் முன்பாக 04.05.2026 அன்று இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, முறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை - 1அவர்கள் ஆஜராகியும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இறுதியாக இந்நீதிமன்றம் இன்று வழங்கும்.

**உத்தரவு**

1. இதுவரை மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணையில் தெரியவருவதாவது:-கடந்த 04.03.2025 அன்று, எம்.5 எண்ணூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, புகார்தாரர் அளித்த புகாரின்படி, அவர் கல்லூரிக்குச் சென்று வருவதற்காக அவரது பெற்றோர் கைப்பேசி ஒன்றை வாங்கிக் கொடுத்திருந்ததாகவும், அக்கைப்பேசியில் ஸ்னாப்சாட் (Snapchat) செயலியை பதிவிறக்கம் செய்து பயன்படுத்தி வந்ததாகவும் தெரியவந்தது. 23.02.2025 அன்று, ஸ்னாப்சாட் செயலி வாயிலாக எதிரி தமீம் கான் என்பவருடன் புகார்தாரருக்கு அறிமுகம் ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இருவரும் நண்பர்களாக

குறுஞ்செய்திகள் மூலம் தொடர்பில் இருந்து, பின்னர் "Truth or Dare" என்ற விளையாட்டை விளையாடி வந்ததன் மூலம் இருவருக்கும் நெருக்கமான பழக்கம் ஏற்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, எதிரி புகார்தாரருக்கு ஆபாசமான குறுஞ்செய்திகளை அனுப்பி, ஒழுக்கக்கேடான முறையில் பேசி வந்துள்ளார். புகார்தாரர் அதற்கு இணங்காத நிலையிலும், தொடர்ந்து குறுஞ்செய்திகள் அனுப்பி அவருக்கு தொந்தரவு அளித்துள்ளார். பின்னர், புகார்தாரரின் புகைப்படங்களை அனுப்புமாறு எதிரி கேட்டுக் கொண்டதன் பேரில், புகார்தாரர் தனது சாதாரண புகைப்படங்களை அனுப்பியுள்ளார். அதன் பின்னர், புகார்தாரரின் நிர்வாணப் புகைப்படங்களை அனுப்புமாறு எதிரி வற்புறுத்தியுள்ளார். அதற்கு புகார்தாரர் மறுப்பு தெரிவித்தபோது, ஏற்கனவே அனுப்பியிருந்த குறுஞ்செய்திகளை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டு, இருவருக்கும் தொடர்பு இருப்பதாக பரப்பிவிடுவேன் என்று மிரட்டி, அவருக்கு தொடர்ந்து மனஅழுத்தம் ஏற்படுத்தியுள்ளார். அந்த மிரட்டலுக்கு அஞ்சி, 28.02.2025 அன்று புகார்தாரர் தனது நிர்வாணப் புகைப்படத்தை எதிரிக்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்றுக்கொண்ட எதிரி, அப்புகைப்படத்தை வைத்து புகார்தாரரை தொடர்ந்து மிரட்டி, தனது விருப்பத்திற்கு இணங்க நடக்க வேண்டும் என்றும், நேரில் சந்தித்து தன்னுடன் இருக்க வேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளார். புகார்தாரர் அதற்கு மறுப்பு தெரிவித்தபோது, அவரது நிர்வாணப் புகைப்படங்களை தனது நண்பர்களுக்கும் மற்றவர்களுக்கும் கைப்பேசி மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலம் அனுப்பிவிடுவேன் என்று மிரட்டியுள்ளார். இவ்வாறு, எதிரி புகார்தாரரின் நிர்வாணப் புகைப்படத்தை பயன்படுத்தி அவரை மிரட்டி, அச்சுறுத்தி, அவரது தனிமனித கண்ணியத்திற்கும் மன அமைதிக்கும் பாதிப்பு ஏற்படுத்தியுள்ளதால்,

புகார்தாரர் அளித்த புகாரின் அடிப்படையில் காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து புலனாய்வு மேற்கொண்டனர். புலன் விசாரணையில், எதிரியின் மேற்கண்ட செயல்கள் U/s. 75, 78 BNS, 2023, 66E, 67 & 67 A Information Technology Act, 2000 பிரிவுகளில் தண்டிக்கதக்க குற்றத்தை புரிந்துள்ளதாக எம்.5 எண்ணூர் காவல் நிலைய ஆய்வாளர் குற்ற அறிக்கை ஒன்றை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அவரிகளிடம் இவ்வழக்கின் ஆவணங்களின் நகல்கள் யாவும் 230 BNSS பிரிவின் கீழ் வழங்கப்பட்டன.

3. எதிரி மீது சட்டப்பிரிவு U/s. 75, 78 BNS, 2023, 66E, 67 & 67 A Information Technology Act, 2000 கீழான குற்றம் திருவள்ளூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால் இவ்வழக்கை மேல்விசாரனை செய்யும் பொருட்டு, திருவள்ளூர் மாவட்ட நீதிமன்றம் சமர்பிக்க குவிமுசு 209(அ) பிரிவின் கீழ் உத்தரவிடுகிறேன்.

4. இவ்வழக்கில் எதிரி (11.03.2025) தேதியில் கைது செய்யப்பட்டு, பதினைந்து நாட்கள் நீதிமன்றக் காவலுக்குட்படுத்தப்பட்டு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மூலமாக (27.03.2025) ஜாமீன் பெற்றுள்ளார்.

5. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களையும், தடயங்களையும், திருவள்ளூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் சமர்பிக்குமாறு குவிமுச 209 (இ) பிரிவின் கீழ் உத்தரவிடுகிறேன்.

6. இவ்வழக்கினை திருவள்ளூர் மாவட்ட அமர்வு நீதிமன்றம் சமர்பித்தல் குறித்து அரசுக்குற்றத்துறை உதவி வழக்கறிஞர், திருவள்ளூர் அவர்களுக்கு அறிவித்தல் செய்ய குவிமுச 209 (இ) பிரிவின் கீழ் உத்தரவிடுகிறேன்.

7. இவ்வழக்கில் எதிரி மீதுள்ள இந்த வழக்கை திருவள்ளூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் வழக்கறிஞர் வைத்து வாதாட போதுமான வசதிகள் உள்ளது என்றும் கூறினார்.

இந்த உத்தரவு என்னால் இந்நீதிமன்றத்தில் 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 04 ஆம் நாள் வியாழக்கிழமை அவையறிய பகிரப்பட்டது.

பின் இணைப்பு : இல்லை

ஒம்/- கே. கார்த்திக்
நீதித்துறை நடுவர்,
திருவொற்றியூர்.

//உண்மை நகல்//

ஒம்/- கே. கார்த்திக்
நீதித்துறை நடுவர்,
திருவொற்றியூர்.